எந்தக் குளத்தையும் விட்டுவிட வேண்டுமென்று எந்த அரசாங்கமும் விரும்பாது!

# விவசாயிகளுடைய நலனைப் போற்றுவதில் அரசு உறுதியாக உள்ளது!

## பேரவையில் – அ.தி.மு.க. உறுப்பினருக்கு – நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் பதில்!

சென்னை, மார்ச் 28–

சட்டப்பேரவையில் ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் அ.தி.மு.க. உறுப்பினர் ஏ.கே. செல்வராஜ் பேசுகையில், அத்திக்கடவு அவிநாசி திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. விடுபட்ட பகுதிக்கு இரண்டாவது குடிநீர்த் திட்டம் வேண்டும் என்று பேசினார்.

அப்போது நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறுக்கிட்டு பதிலளித்து பேசியதாவது:

**நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் :** அமைச்சராக இருந்தவர். அவருக்கு எப்படி பதில் சொல்வது என்பது தெரியும். அதே பதிலைத்தான்



நானும் சொல்கிறேன். அதில் விடுபட்டுப்போனவைகள் எல்லாம் ஏராளம். முதலிலே இந்தத் திட்டம் வராது என்றும், இந்தத் திட்டம் எங்கள் ஊருக்கு வேண்டாம் என்றும் சொல்லிவிட்டார்கள். இப்போது தண்ணீர் வருவதைப் பார்த்துவிட்டு எங்களுக்கும் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை கையில் எடுப்பதற்கு கிட்டத்தட்ட ரூ.6,000 கோடி தேவைப்படுகிறது. ஆகவே, இது நிதி நிலைமைக்கேற்ப எடுக்கப்படும். ஆகையினால் எந்தக் குளமும் விட்டுவிட வேண்டுமென்று எந்த அரசாங்கமும் விரும்பாது. ஆகையினால் விவசாயிகளுடைய நலனைப் போற்றுவதில் நான் உங்களைவிட, பின்னடைய மாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் பதிலளித்தார்.

---

நாங்கள் எந்த மொழிக்கும் எதிரானவர்கள் அல்ல!

# திணிப்பையும் ஆதிக்கத்தையும்தான் நாங்கள் எதிர்க்கிறோம்!

## உ.பி. முதல்வர் தெரிவித்திருந்த கருத்தை அடுத்து – வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டவட்டம்!

சென்னை, மார்ச். 28–

**மும்மொழிக் கொள்கை மற்றும் நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு ஆகியவற்றிற்கு தமிழ்நாடு எதிர்ப்பு தெரிவித்து வருவது குறித்து உத்தரப் பிரதேச மாநில முதலமைச்சர் அவர்கள் ANI செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டி தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், "நாங்கள் எந்த மொழிக்கும் எதிரானவர்கள் அல்ல! திணிப்பையும் ஆதிக்கத்தையும்தான் எதிர்க்கிறோம்" என்று விளக்க மளித்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் அந்த வலைதளப் பதிவு வருமாறு:-

**இருமொழிக் கொள்கையிலும் நியாயமான மறுசீரமைப்பு கோரிக்கையிலும் தமிழ்நாட்டின் நியாயமான, உறுதியான குரல் இந்தியாவெங்கும் எதிரொலிக்கிறது. இதனால் பா.ஜ.க. நிலைகுலைந்து போயுள்ளது அப்பட்டமாகத் தெரிகிறது. வேண்டுமானால் அக்கட்சித் தலைவர்கள் அளிக்கும் நேர்காணல்களைப் பாருங்கள்.**

**அதிலும் தற்போது மாண்புமிகு திரு. யோகி ஆதித்யநாத் அவர்கள் வெறுப்புக் கூடாது என்று நமக்குப் பாடமெடுக்க வந்திருக்கிறார். வேண்டாம், வெறுப்பு பற்றி இவர் பேசுவது நகைமுரண் மட்டுமல்ல, அரசியலின் ஆகச்சிறந்த அவல நகைச்சுவை இது.**

**நாங்கள் எந்த மொழிக்கும் எதிரானவர்கள் அல்ல. திணிப்பையும் ஆதிக்கத்தையும்தான் எதிர்க்கிறோம்.**

**வாக்குகளுக்காகக் கலவரம் செய்வதல்ல எங்கள் அரசியல்! மாண்புக்கும் நீதிக்குமான உரிமைப்போர் எங்களுடையது!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

கூடலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில்

# சிறுவர்களுக்கு எதிரான பாலியல் புகார்: வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் வழக்குப் பதிவு!

## குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத் தந்த நீலகிரி மாவட்ட காவல் துறையினர்!

*சென்னை, மார்ச் 28 -*

*கூடலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் குற்ற வாளிக்கு நீலகிரி மாவட்ட காவல் துறையினர் தண்டனை பெற்றுத் தந்தனர்.*

*அதன் விவரம் வருமாறு: நீலகிரி மாவட்டம் கூடலூர் உட்கோட்டம் கூடலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கடந்த 11.05.2020 ஆம் தேதி அன்று கூடலூர் கோழிப் பாலம் பகுதியைச் சார்ந்த 17 வயது சிறுமி தன்னை 8.5.2020 அன்று இரவு வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் பக்கத்து வீட்டைச் சார்ந்த ராமகுட்டி என்பவரது மகன் சந்தோஷ் (23) என்பவர் பாலியல் வன்கொடுமை செய்ததாகக் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண் 07/2020 /பி 5(n) 6 of POCSO Act and 363 IPC வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு குற்றவாளியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டது.*

*இந்த வழக்கில் புலன் விசாரணை முடித்து நீதிமன்றத்தில் காவல்துறையினர் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்தனர்/*

*இந்த வழக்கில் நீதிமன்ற விசாரணை முடித்து 26.03.2025 அன்று உதகை மகிளா நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது மகிளா நீதிபதி அவர்கள் குற்றவாளிக்கு 13 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து உத்தர விட்டார்.*

---

மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில்–ஒன்றிய அரசைக் கண்டித்து

# மதுரை வடக்கு மாவட்டம் மேலூரில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்!

## திருச்சி என்.சிவா எம்.பி., சிறப்புரை! ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., இன்பா ஏ.என்.ரகு, ஜி.பி.ராஜா பங்கேற்பு

*மதுரை, மார்ச் 28-*

*மதுரை வடக்கு மாவட்டம் மேலூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. இளைஞரணி சார்பாக கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க ஒன்றிய பாசிசபாஜக அரசைக் கண்டித்து மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் மேலூரில் வரும் 30ம் தேதி நடைபெற உள்ளது. இதில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி., சிறப்புரையாற்ற உள்ளார். அதன் விபரம்*

*மதுரை வடக்கு மாவட்டம் முழுவதும் தொகுதி வாரியாக ஒன்றிய பாசிச பாஜக அரசின் இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி இழைப்பு போன்ற செயல்களை கண்டித்து தொகுதி வாரியாக இளைஞர் அணி சார்பாக மாபெரும் கண்டன பொதுக் கூட்டங்கள் நடைபெற்று வருகிறது.*

*இதன் ஒரு பகுதியாக வரும் 30.03.2025ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி அளவில் மேலூரில் பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்திற்கு வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையேற்று கண்டன உரையாற்ற உள்ளார். மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் இன்பா ஏ.என்.ரகு, ஜி.பி.ராஜா, இளம் பேச்சாளர் இதயபிறவி பிரசாந்த் உரையாற்ற உள்ளனர்.*

*கழக கொள்கை பரப்புச் செயலாளரும், மாநிலங்களவை குழு தலைவருமான திருச்சி என்.சிவா எம்.பி., ஒன்றிய அரசின் அநீதி குறித்து சிறப்புரையாற்ற உள்ளார் .மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் குமரேசன் வரவேற்புரையாற்ற உள்ளார்*

*நகர செயலாளர் முகமது யாசின், ஒன்றிய செயலாளர்கள் குமரன், கிருஷ்ணமூர்த்தி, பாலகிருஷ்ணன், ராஜராஜன், ராஜேந்திர பிரபு, பழனி மற்றும் கார்த்திகேயன் உள்ளிட்டோர் முன்னிலை வகிக்க உள்ளனர்*

*மாவட்ட, மாநில நிர்வாகிகள் பாலசுப்பிரமணியன், கரு.தியாகராஜன், சோமசுந்தரபாண்டியன், சேகர், நேருபாண்டியன், வக்கீல் கலாநிதி, கலை கார்த்திகேயன், பூபதி, ஆசைக்கண்ணன், ரோகிணி பொம்மதேவன், கிருஷ்ணகுமார், பூமிநாதன், செல்வராஜ், வடிவேல் முருகன், தனச்செல்வம், ஸ்ரீதர், முத்தையன், சுவேதா பேகம் அப்பாஸ், ஜெயக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்க உள்ளார்கள்*

*இந்நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம். இளங்கோ நன்றி உரையாற்ற உள்ளார்*

*மேலும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணியினர், கழக முன்னோடிகள், கழகத்தினர், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பெரும் திரளானோர் பங்கேற்க உள்ளனர்.*

---

கழக மூத்த முன்னோடி –முன்னாள் ஒன்றியச் செயலாளர்

# சி.தேசிங்குராஜன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி

*தருமபுரி, மார்ச் 28-*

*தருமபுரி மாவட்டம் அரூர் வடக்கு ஒன்றியம் அக்ரஹாரம் ஆட்டையாம் பட்டியில் கழக மூத்த முன்னோடி முன்னாள் அரூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர், தருமபுரி மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுதறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் சி.தேசிங்குராஜன் மறைவெய்தினார்.*

*அவரது உடலுக்கு தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன், தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, முன்னாள் மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ர*



*மணி, முன்னாள் மாவட்ட கழக பொறுப்பாளர்கள் பி.என்.பி.இன்பசேகரன், பி.தர்மச்செல்வன், இரா. சித்தார்த்தன், சென்னகிருஷ்ணன், அ.சத்தியமூர்த்தி, ஆர்.பி.செந்தில்குமார்,*

*கலை, ராஜேந்திரன், ஆர்.வேடம்மாள், சந்திரமோகன், வே.சௌந்தரராசு, செங்கண்ணன், நெப்போலியன், எம். ரத்தினவேல், முத்துக்குமார் பி.எஸ்.சரவணன், முல்லை ரவி, ஆர்.சிவகுரு, கு.தமிழழகன், அருன் உதயசூரியன், விடுதலை சிறுத்தை மாவட்ட கழக செயலாளர் சாக்கன்சர்மா, மதிமுக மாவட்ட செயலாளர்*

*இராமதாஸ்,திராவிடர் கழகம் ஊமைஜெயராமன், மற்றும் கழக மாநில, மாவட்ட ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கிளைகழக நிர்வாகிகள் உள்ளிட்ட 1000 க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.*



உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதி விக்கிரமங்கலம் கள்ளர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ – மாணவிகளுக்கு விளையாட்டு மைதான வசதி இல்லாமல் இருப்பதாக கூறி அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மற்றும் பள்ளி நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளமகிழன் அவர்களிடம் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் பள்ளியின் அருகில் உள்ள மேடான பகுதிகளை சரி செய்து மைதானத்திற்கு உபயோகப்படும் படி செய்து கொடுக்கும் பணிகளை தனது சொந்த செலவில் செய்து கொடுத்தார். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

---

ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா அறிக்கை!

*தென்காசி, மார்ச் 28-*

*தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து நாளை 29ஆம் தேதி கழக ஒன்றியங்களில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் தொடர்பாக தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ விடுத்துள்ள அறிக்கை வருமாறு.*

*அதில் அவர் தெரிவித்திருப்பதாவது.*

*முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் (MGNREGA)மூலம் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூபாய் 4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து தி.மு.க சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் நாளை (29.03. 2025-சனிக்கிழமை) மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.*



*அதன்படி தென்காசி வடக்கு மாவட்டத்தில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் இடங்கள் மற்றும் முன்னிலை விவரம் வருமாறு.*

*சங்கரன்கோவில் (தெற்கு)இடம் வீரசிகாமணி ச.தங்கவேலு தலைமைச் செயற்குழு உறுப்பினர் முன்னிலையில். சங்கரன்கோவில் (வடக்கு) இடம் கரிவலம்வந்தநல்லூர்*

*மாவட்ட பொருளாளர் இல.சரவணன் முன்னிலையில். குருவிகுளம்(மேற்கு) திருவேங்கடம் பேரூர்இடம் திருவேங்கடம் மாவட்ட கழகச் செயலாளர் முன்னிலையில். வாசுதேவநல்லூர் (வடக்கு) இடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு தலைமைச் செயற்குழு உறுப்பினர் யூ.எஸ்.டி.சீனிவாசன் முன்னிலையில்*

*குருவிகுளம்(கிழக்கு) இடம் இளையரசனேந்தல் மாவட்ட அவை தலைவர் கோ.பத்மநாபன் முன்னிலையில். குருவிகுளம் (தெற்கு)*

*(வடக்கு) இடம் குருவிகுளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு மாவட்ட துணைச் செயலாளர் ஜோ.ராஜதுரை முன்னிலையில். மேலநீலிதநல்லூர் (மேற்கு) இடம் திருமலாபுரம் மாநில மருத்துவ அணி துணை செயலாளர் சொ.சு.செண்பகவிநாயகம் முன்னிலையில். மேலநீலிதநல்லூர் (கிழக்கு) இடம் குருக்கள்பட்டி மாவட்ட துணை செயலாளர் சு.புனிதா*

*முன்னிலையில். மேலநீலிதநல்லூர் (தெற்கு)இடம் வன்னிக்கோனந்தல் தலைமை செயற்குழு உறுப்பினர் பரமகுரு முன்னிலையில். வாசுதேவநல்லூர் (தெற்கு) இடம் முள்ளிக்குளம் மாவட்ட துணை செயலாளர் வே.மனோகரன் முன்னிலையிலும் நடைபெறுகிறது.*

*இந்நிகழ்வில் மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர், கிளை,கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள்,அந்தந்த பகுதியினை சேர்ந்த கழக உடன் பிறப்புகள் மற்றும் 100 நாள் வேலை திட்டத்தில் பயன் பெறும் பயனாளிகள், பொதுமக்கள் பங்கேற்று தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க.அரசை கண்டித்து நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

---

100 நாள் வேலை உறுதித்திட்டத்திற்கு நிதி வழங்க மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# சேலம் மேற்கு மாவட்டத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!



## மாவட்டச் செயலாளர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி அறிவிப்பு!

100 நாள் வேலை உறுதித்திட்டத்தில் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ. 4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் தலா இரண்டு இடங்களில் நாளை ( 29.03.2025 - சனிக்கிழமை ) காலை 9.30 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும்.

| ஒன்றியம் | தலைமை | கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| நங்கவள்ளி | டி.எம்.செல்வகணபதி<br>மாவட்ட கழக செயலாளர் | சூரப்பள்ளி ஊராட்சி, தபால் நிலையம் அருகில் |
| | திருமதி. எஸ்.எலிசபெத்ராணி<br>மாவட்ட கழக துணை செயலாளர்<br>பி.பொன்னுசாமி<br>மாவட்ட கழக பொருளாளர் | கோனூர் ஊராட்சி தபால் நிலையம்,<br>ஆஞ்சுநேயர் கோவில் அருகில். |
| சங்ககிரி | பி.தங்கமுத்து<br>மாவட்ட கழக அவைத்தலைவர்<br>திருமதி. எஸ்.தங்கமணி<br>பொதுக்குழு உறுப்பினர் | தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி,<br>கிடையூர் பேருந்துநிலையம் |
| | கே.எம்.ராஜேஸ்<br>ஒன்றிய கழக செயலாளர்<br>எஸ்.பி.ரவிக்குமரன்<br>பொதுக்குழு உறுப்பினர் | கோனேரிப்பட்டி ஊராட்சி,<br>காவேரிப்பட்டி அரசுமரத்து பேருந்துநிலையம் |
| கொங்கணாபுரம் | அ.த.சம்பத்குமார்<br>மாவட்ட கழக துணை செயலாளர்<br>மு.சௌந்தர்ராஜன்<br>பொதுக்குழு உறுப்பினர் | கோரணம்பட்டி ஊராட்சி, மூலப்பாதை |
| | ப.பரமசிவம்<br>ஒன்றிய கழக செயலாளர் | வெள்ளாளபுரம் ஊராட்சி, வெள்ளாளபுரம் |
| தாரமங்கலம் மேற்கு | ஆர்.பாலகிருஷ்ணன்<br>ஒன்றிய கழக செயலாளர் | பாப்பம்பாடி ஊராட்சி, சந்தை திடல் |
| எடப்பாடி | க.சுந்தரம்<br>மாவட்ட கழக துணை செயலாளர்<br>திரு. கே.என்.நல்லதம்பி<br>ஒன்றிய கழக செயலாளர் | சித்தூர் ஊராட்சி, சந்தை திடல் |
| | பி.எ.முருகேசன்<br>தலைமை செயற்குழு உறுப்பினர்<br>எஸ்.பூவாகவுண்டர்<br>தலைமை செயற்குழு உறுப்பினர் | ஆவணிபேரூர் கீழ்முகம் ஊராட்சி,<br>போடிநாய்க்கம்பட்டி பேருந்துநிலையம் |
| மகுடஞ்சாவடி | க.பச்சமுத்து<br>ஒன்றிய கழக செயலாளர்<br>க.அன்பழகன்<br>பொதுக்குழு உறுப்பினர் | தப்பகுட்டை ஊராட்சி, காளிங்கானூர்<br><br>மகுடஞ்சாவடி ஊராட்சி,<br>மகுடஞ்சாவடி பேருந்துநிலையம் |
| மேச்சேரி | எஸ்.சீனிவாசபெருமாள்<br>ஒன்றிய கழக செயலாளர் | அரங்கனூர் ஊராட்சி, செம்மனூர் |
| | ஆர்.காசிவிஷ்வநாதன்<br>பொதுக்குழு உறுப்பினர் | மல்லிக்குந்தம் ஊராட்சி, மல்லிக்குந்தம்<br>பேருந்துநிலையம் |
| கொளத்தூர் | மு.ராமநாதன்<br>தலைமை செயற்குழு உறுப்பினர்<br>என்.பழனியப்பன் | சித்தரப்பட்டி புதூர் ஊராட்சி, 4 ரோடு செக்போஸ்ட் |
| | பொதுக்குழு உறுப்பினர்<br>எம்.மிதுன்சக்ரவர்த்தி<br>ஒன்றிய கழக செயலாளர் | காவேரிபுரம் ஊராட்சி, காவேரிபுரம் பேருந்து<br>நிலையம் |

இக்கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள் - முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக 100 நாள் வேலை உறுதித்திட்டத்தின் கீழ் பணிபுரியும் பயனாளிகள் அனைவரும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**(டி.எம்.செல்வகணபதி)**
மாவட்டச் செயலாளர்
சேலம் மேற்கு மாவட்ட
தி.மு.க.